2013 அக்டோபர் 29]

முற்பகல் 11–15

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென்று இல்லாமல், தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, இந்த அவையிலே அறந்தாங்கி தொகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கு என் ஆயுட்காலம் முழுவதும் என்னுடைய நன்றியையும், தொகுதி மக்களுடைய சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளையும் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

4265*—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருநீலக்குடி ஊராட்சியில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சமவெளிப் பகுதியில் 30 ஆயிரம் மக்கள் தொகையும் மற்றும் 8 கிலோ மீட்டர் தொலைவில் வேறு அரசு மருத்துவமனையும் இல்லாத கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கலாம் என்ற அடிப்படையில், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோரும் திருநீலக்குடி கிராமம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. இதே திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே முருக்கங்குடி, திருநாகேஸ்வரம், வேப்பத்தூர் ஆகிய 3 இடங்களில்

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. திருநீலக்குடி கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் திருவிடைமருதூர் அரசு வட்ட மருத்துவமனையும், 4 கிலோ மீட்டர் தூரத்தில் ஆடுதுறை அரசு வட்டம் சாரா மருத்துவமனையும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் திருநாகேஸ்வரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன. இக்கிராமத்தின் மக்கள்தொகை 5,025 ஆகும். எனவே இங்கு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருநீலக்குடி ஊராட்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும், அதனையொட்டி இருக்கக்கூடிய ஊராட்சியான விட்டலூர், எஸ். புதூர், ஆண்டலாம்பேட்டை ஆகிய ஊராட்சிகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் வாழ்கிறார்கள். கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கோரியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்தால் அமைக்கப்படும். அருகருகே மருத்துவமனை இருக்கிறது என்று குறிப்பிட்டு, நான் கேட்டிருக்கக்கூடிய திருநீலக்குடி கிராமம் 8 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது என்ற பதிலையும் தந்திருக்கிறார்கள். எனவே, 8 கிலோ மீட்டர் தூரமுடைய அந்த திருநீலக்குடி கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

கிராமப்புறத்தில் பரவக்கூடிய சிக்கன்குன்யா, நிமோனியா, மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படும் கிராமப்புற பாதுகாப்பற்ற மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் சுகாதார நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறக்கூடிய திருநீலக்குடி கிராமமானது 5,025 மக்கள்தொகை கொண்ட கிராமம். இந்தக் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் (sub-centre) சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 30 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திலும் ஒரு கிராம சுகாதார செவிலியர் பணிபுரிகிறார். திருநீலக்குடி கிராமத்திலும் ஒரு துணை சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதோடு, அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, புதிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநீலக்குடி ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு இடம் இருக்கிறது. ஊராட்சியில் தீர்மானமும் போட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கட்டடமும் கட்டப்பட்டு இருக்கிறது. எனவே, நிதிச் சுமை இல்லாத நிலையில் உடனடியாக அங்கே கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவங்குவார்களா என அறிய விரும்புகிறேன். அதோடு அதற்குரிய கட்டடமும் வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கித் தரவும் நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது கட்சிப் பாகுபாடு பார்க்காமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையாக முழுமையாக உழைக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை நிரூபித்துத் தருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கிராமத்தின் மக்கள் தொகை 5,025. ஆகவே, இக்கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய காரணத்தினால் துறையின் சார்பாக ஆய்வு செய்து, ஆய்வறிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

மாணவர் விடுதி

***17291—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தொகுதி, சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக புதிய மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடித் தொண்டர்களின் கழகப் பணியைக் கனிவுடன் பரிசீலித்து அவர்களை வளர்த்து, ஆளாக்கி, அழகு பார்த்து, அருளாசி வழங்கி, அங்கீகாரம் வழங்கும்